

சென்னை கிழக்கு மாவட்ட கழக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள்/ செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் சென்னை, பெரவள்ளூர் கொளத்தூர் கிழக்கு பகுதி தேர்தல் பணிமனையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உரையாற்றினார். கூட்டத்தில் காங்கிரஸ்,சி.பி.எம், சிபிஐ ,மதிமுக, தேமுதிக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மக்கள் நீதி மையம் மனிதநேய மக்கள் கட்சி, திராவிடர் கழகம் எஸ் பி பி ஐ, மனிதநேய ஜனநாயக கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, திராவிட இயக்க தமிழர் பேரவை, இந்திய சமுக நீதி இயக்கம் ஆகிய கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் மாவட்ட செயலாளர் மற்றும் கழக வேட்பாளர்கள், பகுதிச் செயலாளர்கள் கலந்து கொண்டு கருத்துகளை தெரிவித்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான ஆவடி சாமு.நாசர் நடைபெறுகிற தேர்தலில் பணியாற்றுவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவை திரட்டினார். உடன் பூவிருந்தவல்லி தொகுதி வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மாவட்ட நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பகுதி பேருர் செயலாளர்கள் நிர்வாகிகள் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் அவர்களை மீண்டும் ஆட்சி அரியணையில் ஏற்றிட

# கழக வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முழுவதும் இல்லம் தோறும் தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் வாக்கு சேகரிப்பு!

### கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை,ஏப்.1

கழக வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முழுவதும் மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைத்து இல்லம் தோறும் வாக்கு சேகரிப்பு நடைபெற உள்ளது என கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ. தங்கம் அறிக்கை விடுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடனும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நல்வாழ்த்துக்களுடன் கழகத்தின் சார்பில் களம் காணுகின்ற கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்தும், கழக மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைத்து எனது (ரெ.தங்கம் மாநிலத் தலைவர்) தலைமையில் ஏப்ரல் 3ஆம் தேதி முதல் நிகழ்ச்சியாக தியாகராயர் நகரில் இல்லம் தோறும் "இணைப்பு சக்கர வண்டியில்" சென்று வாக்காளர்களை சந்தித்து வாக்கு கேட்டு பரப்பரை நடத்தப்பட உள்ளது.

இந்நிகழ்வில்,கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநில நிர்வாகிகளும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில, மாவட்ட, மாநகர, நகர ஒன்றிய சங்க நிர்வாகிகளும் அவரவர்களுக்கு மாவட்ட வாயிலாக ஒதுக்கப்பட்ட தேதிகளில் நான் (ரெ.தங்கம் மாநில தலைவர்) வாக்கு சேகரிக்க வருகை தரும்போது தவறாமல் பங்கேற்று வாக்குகள் சேகரித்து அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வேட்பாளர்களை வெற்றியடைய செய்தும், தமிழ்நாட்டின் முதல்வராக கழகத் தலைவர் தளபதி அவர்களை மீண்டும் அரியணையில் ஏற்றிட அனைவரும் இரவு, பகல் பாராது உழைத்திட வேண்டுமென, கழக மாற்றுத்திறனாளிகளையும்,

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தினரையும்,

மற்றும் அனைத்து மாற்றுத்திறனாளிகள் சங்கங்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு, கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் ரெ.தங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### 23. சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி

## தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து கழக தேர்தல் பிரச்சார இசைக்குழு



| வ.எண். | நாள் மற்றும் பகுதி | நேரம் மற்றும் வட்டங்கள் |
|---|---|---|
| 1. | 2–4–2026 வியாழன் சைதை மேற்கு | மாலை 5 மணி – 139 |
| | | இரவு 7 மணி – 139 அ |
| 2. | 3–4–2026 வெள்ளி சைதை கிழக்கு | மாலை 5 மணி – 168 |
| | | இரவு 7 மணி – 168 |
| 3. | 4–4–2026 சனி சைதை மேற்கு | மாலை 5 மணி – 140 |
| | | இரவு 7 மணி – 140 அ |
| 4. | 5–4–2026 ஞாயிறு சைதை மேற்கு | மாலை 5 மணி – 142 |
| | | இரவு 7 மணி – 142 அ |
| 5. | 6–4–2026 திங்கள் சைதை கிழக்கு | மாலை 5 மணி – 170 |
| | | இரவு 7 மணி – 170 |
| 6. | 7–4–2026 செவ்வாய் சைதை மேற்கு | மாலை 5 மணி – 140 |
| | | இரவு 7 மணி – 140 அ |
| 7. | 8–4–2026 புதன் சைதை கிழக்கு | மாலை 5 மணி – 169 அ |
| | | இரவு 7 மணி – 169 அ |
| 8. | 9–4–2026 வியாழன் சைதை மேற்கு | மாலை 5 மணி – 142 |
| | | இரவு 7 மணி – 142 அ |
| 9. | 10–4–2026 வெள்ளி சைதை கிழக்கு | மாலை 5 மணி – 172 அ |
| | | இரவு 7 மணி – 172 அ |
| 10. | 12–4–2026 ஞாயிறு சைதை கிழக்கு | மாலை 5 மணி – 168 அ |
| | | இரவு 7 மணி – 168 அ |
| 11. | 13–4–2026 திங்கள் சைதை கிழக்கு | மாலை 5 மணி – 172 |
| | | இரவு 7 மணி – 172 |
| 12. | 14–4–2026 செவ்வாய் சைதை மேற்கு | மாலை 5 மணி – 139 |
| | | இரவு 7 மணி – 139 அ |
| 13. | 15–4–2026 – புதன் சைதை கிழக்கு | மாலை 5 மணி – 169 |
| | | இரவு 7 மணி – 169 |
| 14. | 16–4–2026 – வியாழன் சைதை கிழக்கு | மாலை 5 மணி – 170 அ |
| | | இரவு 7 மணி – 170 அ |

– சைதாப்பேட்டை தேர்தல் பணிக்குழு

## சென்னை கிழக்கு மாவட்டம்

## திரு.வி.க.நகர் வடக்கு, திரு.வி.க.நகர் தெற்கு, வில்லிவாக்கம் கிழக்கு ஆகிய பகுதிகளில் ஐந்து மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் வில்லிவாக்கம் கிழக்கு, எழும்பூர் தெற்கு ஆகிய பகுதிகளில் அவைத்தலைவர் ஆகிய இரண்டு பொறுப்புகளுக்கான தேர்தல்!

# தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுத்தேர்தலில் சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி, மாவட்ட பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட மு.இளஞ்செழியன், பி.சதிஷ் – மாவட்ட பிரதிநிதி மு.விஜயகுமார் ஆகியோர் வகித்து வந்த பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதாலும், திரு.வி.க.நகர் தெற்கு பகுதி, மாவட்ட பிரதிநிதி நா.ராஜேந்திரன் மறைவெய்திய காரணத்தாலும் – வில்லிவாக்கம் கிழக்கு பகுதி, மாவட்ட பிரதிநிதி ப.செந்தில்குமார் வெளியூர் சென்றுவிட்ட காரணத்தாலும் – அதே பகுதியின் அவைத்தலைவர் மறைவெய்திய காரணத்தாலும்; எழும்பூர் தெற்கு பகுதி அவைத்தலைவர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதாலும்; திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் மூன்று, திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் ஒன்று, வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் ஒன்று என மொத்தம் ஐந்து மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி அவைத்தலைவர் மற்றும் எழும்பூர் தெற்கு பகுதி அவைத்தலைவர் என இரண்டு பகுதி அவைத்தலைவர் ஆகிய பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதால் அதற்குரிய வேட்பு மனுக்கள் தலைமைக் கழகத்தில் பெற்று, முறைப்படி வேட்புமனுவினை பூர்த்தி செய்து, அதற்குரிய கட்டணத்துடன் 31-3-2026 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக தலைமைக் கழகத்தில் தாக்கல் செய்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் 3 மாவட்ட பிரதிநிதிகள் பொறுப்புகளுக்கு கே.சிவகுமார், கே.யோகானந்தம், பா.ஜெகதீஷ் ஆகிய 3 பேர் – திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் அ.சோமசுந்தரம் – வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் கே.பாஸ்கர் என 5 மாவட்ட பிரதிநிதிகள் பொறுப்புகளுக்கு 5 பேர் மட்டும் மற்றும் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி அவைத்தலைவர் பொறுப்புக்கு தா.ஜெரால்டு ராஜதேவன் – எழும்பூர் தெற்கு பகுதி அவைத்தலைவர் பொறுப்புக்கு இ.மொய்தீன் ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**சென்னை கிழக்கு மாவட்டம்,**

**திரு.வி.க.நகர் வடக்கு பகுதி, மாவட்ட பிரதிநிதிகளாக**

1) திரு. கே.சிவகுமார், 11/15, முதல் தெரு, நரசிம்மன் நகர், புளியந்தோப்பு, சென்னை – 600 012 அவர்களும்;
2) திரு. கே.யோகானந்தம், 21, ஏகாங்கிபுரம் 4வது ஏ தெரு, சென்னை – 600 023 அவர்களும்;
3) திரு. பா.ஜெகதீஷ், 91, ஏகாங்கிபுரம் 4வது பி தெரு, அயன்புரம் சென்னை – 600 023 அவர்களும்;

**திரு.வி.க.நகர் தெற்கு பகுதி, மாவட்ட பிரதிநிதியாக**

திரு. அ. சோமசுந்தரம், 91, எஸ்.எஸ்.புரம், ஏ–பிளாக், 7வது தெரு, ஓட்டேரி, சென்னை – 600 012 அவர்களும்;

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி, மாவட்ட பிரதிநிதியாக**

திரு. கே. பாஸ்கர், 21/7சி, பழனியப்பா முதல் தெரு, அயன்புரம், சென்னை–600 023 அவர்களும்;

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி அவைத்தலைவராக**

திரு. தா.ஜெரால்டு ராஜதேவன், 11/3, வெள்ளாளர் தெரு, அயன்புரம், சென்னை – 600 023 அவர்களும்;

**எழும்பூர் தெற்கு பகுதி அவைத்தலைவராக**

திரு. இ. மொய்தீன், 83/37, அய்யாசாமி தெரு, புதுப்பேட்டை, சென்னை – 600 002 அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 600018
நாள்– 31.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### துரை வீரமணி தலைமை! இரா.வினோத் வரவேற்புரை! வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி ஏற்புரை!

## வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியத்தில் தேர்தல் பணிமனை: ஆர்.எஸ்.பாரதி திறந்து வைக்கிறார்!

### மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் – வேட்பாளரை அறிமுகம் செய்கிறார்!

சென்னை, ஏப். 01

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தேர்தல் பணிமனை திறப்பு விழா இன்று (01.04.2026 புதன்கிழமை) காலை 9 மணி அளவில், அயப்பாக்கம், பேரறிஞர் அண்ணா சிலை அருகில் நடைபெறுகிறது.

ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா.வினோத் வரவேற்புரை ஆற்றுகிறார்.

நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, எஸ்.அருணாச்சலம், வீர.கனிமொழி, இராமாபுரம் வ.செல்வகுமார், எஸ்.பத்மபிரியா, எஸ்.பி.அருள், ந.ஜெயச்சந்திரன், எம்.ஜி.சாமிநாதன், ஆர்.ராஜன், க.சங்கர், என்.ரவி, சு.கௌரிசங்கர், கு.சதீஷ்குமார், ஏ.எம்.யுவராஜா, மாறன் கே.எஸ்.குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தேர்தல் பணிமனையினை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் குத்து விளக்கு ஏற்றி கழக வெற்றி வேட்பாளரை அறிமுகம் செய்கிறார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி ஏற்புரை ஆற்றுகிறார்.

இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், மற்றும் அனைத்து மாவட்ட, ஒன்றிய, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

10 வது வார்டு கிளைச் செயலாளர் டி.யுவராஜ் நன்றியுரை ஆற்றுகிறார்.

### தி. மு. க. தொழிலாளர் அணி

## இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாக **எஸ். பாலகிருஷ்ணன்,** (சேதுபதி நகர், நாகாச்சி உச்சிப்புளி அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம்), **கா. சத்தியேந்திரன்** (எல்.கருங்குளம், எட்டிவயல் அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 31-03-2026.

**பிடிசி ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

### தி.மு.க. பொறியாளர் அணி

## சென்னை தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளராக **சீ. புவியரசன்** (4, சரோஜினிபாய் தெரு, மதியழகன் நகர், சாலிக்கிராமம், சென்னை–600093) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 31-03-2026.

**கு. கருணாநிதி**
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி, போரூர், மவுண்ட் பூந்தமல்லி சாலையில் உள்ள AGT பார்க் ஹோட்டலில் நடைபெற்ற பள்ளி வாசல்களின் கூட்டமைப்பு மற்றும் இஸ்லாமிய இயக்கங்களின் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, வட்ட கழக செயலாளர் சி.சுந்தர் மற்றும் இஸ்லாமிய இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மயிலை தொகுதி வேட்பாளர் த.வேலுவை ஆதரித்து – மயிலை மேற்குப் பகுதி சார்பில்

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, ஏப். 1-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம், சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் மயிலை த. வேலுவை ஆதரித்து செயல்வீரர்கள் கூட்டம் இன்று மாலை 6.00 மணியளவில், YMCA மைதானம் பின்புறம் லோட்டஸ் காலணியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் மா .சுப்பிரமணியன் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்.

எனவே இக்கூட்டத்தில் மயிலை மேற்கு பகுதியை சேர்ந்த பகுதி நிர்வாகிகள் ஜி.ஆர்.ராஜேந்திரன், R.L.V. அசோக் குமார், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன், வட்டக் கழக செயலாளர்கள் டி. ராஜவேலு, சீ .கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர். ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ. ஏழுமலை, மூ. ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், அணிகளின் மாநில மாவட்ட , பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA 2 பாக முகவர்கள் , BLC பாக உறுப்பினர்கள், மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கழகத் தோழர்கள்

அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம். கி.மதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் பொன்னேரி நகரத்திற்குட்பட்ட சுமார் 150 –க்கும் மேற்பட்ட த.வெ.க. மற்றும் அ.தி.மு.க. தொண்டர்கள் அக்கட்சிகளில் இருந்து விலகி,பிரதீப், இம்ரான், ராகுல்ஆகியோர் ஏற்பாட்டில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். உடன் மாவட்ட அவை தலைவர் மு.பகலவன், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.